**டிசம்பர் - 30**

**"வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்." - சங் 65 . 11.**

கடந்த ஆண்டில் நமக்குக் கிடைத்த தெய்வீக பராமரிப்பின் வழிநடத்துதலை மறுபடி நாம் யோசனை செய்து பார்க்கும்போது, வரப்போகிற புது வருஷத்திலும் தேவனுடைய நன்மையையும், கிருபையும், அவரிலுள்ள நம்முடைய விசுவாசத்தையும், நம்பிக்கையையும் ஊக்கிவிப்பதாக. தேவனுடைய சரியான பிள்ளை தகுந்த விதமாக, சென்ற கால சம்பவங்களை நினைத்துப்பார்ப்பது, நாம் முன்பு நம்பியிருந்ததைவிட நம்முடைய விடுதலை மிகவும் சமீபத்திலிருக்கிறதையும், நாம் அவருடைய ஞானதிற்கும், அன்புள்ள கவனத்திற்கும், நம்முடைய சித்தத்தையும், நம்முடைய ஜீவனையும், நமக்குண்டான எல்லாவற்றையும் தொடர்ந்து ஒப்புவிப்போமானால், நம்மில் ஒரு வேலையை ஆரம்பித்த அவர், அதை முடிப்பதற்கு தகுதியுள்ளவரும் இஷ்டமுள்ளவருமாயிருக்கிறார் என்பதையும் உணர்ந்து, முன் காரியத்திற்காக நன்றி தெரிவிப்பது மாத்திரமல்லாமல், ஆனால் நோக்கிப்பார்க்கவும், தன் தலையை உயர்த்தவும் சாத்தியமாக்கும். **- Z 00, 365 (R 2737).**

வருஷம் என்கிற வார்த்தை வேதாகமத்தில் சில வேளைகளில் சராசரி 365 1/4 நாட்களைக் கொண்ட ஒரு காலத்திற்கும், சில வேளைகளில் ஒரு யுகத்திற்கும் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. இரண்டு வகையான வருஷங்களையும் கர்த்தர் தம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறார். தன்னுடைய மகிமைக்காகவும், தன்னுடைய சிருஷ்டிகளின் நன்மைக்காகவும், உலகத்தைத் தாங்கி, பிரமாண்டமான சாதனங்களை இயக்கிக் கொண்டும் பருவகாலங்களின் ஆசீர்வாதங்களை சிருஷ்டிகளுக்குக் கொடுத்துக் கொண்டும், அவர் இயற்கையான வருஷத்தைத் தன்னுடைய நன்மையால் முடிசூட்டுகிறார். இவ்விதமாக, சாபத்தின் வரம்பின் மத்தியில் கர்த்தர் தாராளமாகத் தேவையான அளவுள்ள ஆசிர்வாதங்களைப் பொழிகிறார். சுவிஷேச யுகத்தை, கர்த்தருடைய அனுக்கிரக வருஷமாகப் பார்ப்போமானால், சபையின் மீட்பிலும், போதனையிலும், நீதிமானாக்குவதிலும், பரிசுத்தமாக்குவதிலும், முடிப்பதிலும், விடுவிப்பதிலும், மகிமைப்படுத்துவதிலும், திரள் கூட்டத்தாரை நித்திய ஜீவனுக்குக் கொண்டுவருவதிலும், ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாத பிரதிஷ்டை பண்ணின ஜனங்களை உலகத்தில் பிரபுக்களாவதற்காக அவர்களை விருத்தியாக்குவதிலும், யூதரையும், புறஜாதிகளையும், ஆயிரம் ஆண்டு ஆட்சிக்காகத் தயார் செய்வதிலும், சுவிஷேச யுகம் கர்த்தருடைய நன்மையால் முடிசூட்டப்பட்டிருக்கிறது. மனுக்குலத்தை மன்னிப்பதிலும், உயிரோடெழுப்புவதிலும், போதிப்பதிலும், இரக்கம் காண்பிப்பதிலும், தம்மிடமாக இழுத்து முழுமனுக்குலத்தையும், ஆசிர்வதிப்பதிலும், பூமியையும், கீழ்ப்படிகிற ஜனங்களையும், பூரணத்துக்கு உயர்த்தி, உண்மையுள்ளவர்களுக்கு பரதீசில் நித்திய ஜீவனை அளித்து இவ்விதமாக ஆயிரம் ஆண்டு யுகமும் கர்த்தருடைய நன்மையால் முடிசூட்டப்படும். **- P 26,173.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**யாத் 33.19, 34.6, சங் 33.5, 34.8, 73.1, 107.8,9,43, 145.7,9; ஏசா 61.1,2, 63.7; மத் 7.11, லூக் 4.18,19; ரோம 2.4;**

**தீத் 3.4.**

**கோபுர வாசிப்பு : Z 07, 364 (R 4100).**

**வினாக்கள் : இந்த வருஷத்திற்கான விசேஷித்த ஆசிர்வாதங்கள் எவை? அவை எனக்கு எவ்வாறு உபயோகமாய் இருந்தது?**